**<u>முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண்.322/2021 | இ.ம.எண். |
| எம்.சி.ஓ.பி.எண். | நி.வே.ம.எண். |

2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **ஜானகி** | ஜாதி | : | |
| த/பெ.பெயர் | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| மாவட்டம் | : | | வயது | : | |

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கின் வாதி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1 14.09.2009 தேதியிட்ட முருகவேல் என்பவர் வாதியின் பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் - சான்று நகல் **வா.த.சா.ஆ.1**

2 21.09.2012 தேதியிட்ட வாதி 1,2 பிரதிவாதிகள் மற்ற ஒரு இளங்கோவன் ஆகியோர்களுக்கு கொடுத்த கிரைய ஆவணம் - சான்று நகல் **வா.த.சா.ஆ.2**

3 14.12.2000 தேதியிட்ட 01.01.2009 முதல் 13.12.2020 வரையிலான காலகட்டத்திற்குண்டான வில்லங்க சான்று **வா.த.சா.ஆ.3**

4 தாவாச் சொத்திற்குண்டான வீட்டு வரி ரசீது (8 எண்ணிக்கை) **வா.த.சா.ஆ.4**

5 தாவாச் சொத்திற்குண்டான குடிநீர் கட்டண ரசீது (7 எண்ணிக்கை) **வா.த.சா.ஆ.5**

6 தாவாச் சொத்திற்குண்டான மின்இணைப்பு எண்.573-க்கு 2017 முதல் 2021 வரையில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது (18 எண்ணிக்கை) **வா.த.சா.ஆ.6**

7 தாவாச் சொத்திற்குண்டான மின்இணைப்பு எண்.1745-க்கு 2015 முதல் 2021 வரையில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது (20 எண்ணிக்கை) **வா.த.சா.ஆ.7**

**6-ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**